Class : IX Sub : Tamil

Iyal – 2

# பட்ட மரம்

## 1. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

பச்சை இலைகள் காய்ந்தும், கொட்டியும், மொட்டையாக இருக்கும் பட்ட மரமானது, தான் வெட்டப்படும் நாள் விரைவில் வரும் என்று எண்ணி, கவலை அடைவதாகவும், பெருமூச்சு விடுவதாகவும் எண்ணி கவிஞர் தமிழ் ஒளி அம்மரத்தின் வருத்தங்களாகக் குறிப்பிடுகிறார். அவை,

- அமர நிழல் தந்து, நல்ல மணம் மிகுந்த மலர்களைத் தர கூரை விரித்து இலையாக உதவினேன்.
- இப்பொழுது இந்த இலை, வெந்து கருகி சருகாகி உள்ளேன்.
- கட்டை என்னும் பெயர் பெற்று துன்பப் படுகிறேன்.
- எனக்கு உடையாக இருக்கும் பட்டை, இன்று கிழிந்தும் அழகு குறைந்தும் காணப்படுகிறேன்.
- காலம் என்னும் புயலில் சிக்கிய மனிதன் அமுதுக்காக கரம் நீட்டியதுபோல், நான் இன்று துன்பப்படுகிறேன்.
- ஆனால், அன்றோ! பாடும் பறவைகள் மரக்கிளைகளில் அமர்ந்து பாட்டுப் பாடியது, பனித்திரை மூடி பூமிக்கு ஈர்ப்பைக் கொடுத்தது, கிளைகள் மீது ஏறி சிறுவர்கள் குதிரை விட்டு ஆடியது என இவையாவும் என்னுள் நடந்தது.
- ஆனால் இன்று, ஏட்டில் படிக்கக் கூடிய கதையாகவும், கனவாகவும் என் வாழ்வு முடிந்துவிட்டதே என்று நினைத்துப் பட்ட மரம் வருந்துகிறது. இவையே, பட்ட மரத்தின் வருத்தங்கள் ஆகும்.